**64 வன்னியும் கிணறும் லிங்கமும் வரவழைத்த படலம்**

காவிரி பூம்பட்டணத்தில் வாழ்ந்த ஓர் வணிகனுக்கு தவப்பயனால் ஓர் பெண் பிறந்தாள். அவளை வணிகன் அவளை ஏற்கனவே மணம் முடித் திருந்த தன் மருமகனுக்கே மணம் செய்துகொடுக்கப் போவதாக்க் கூ றிக்கொண்டிருந்தான். தீடீரென வணிகனும் அவனை அடுத்து அவன்ம னைவியும் இறந்தார்கள்.

செய்வதறியாதுமருமகன்தன்மாமன்மகள்நிலைமைக்குவருந்தினான். காவிரிபூம்பட்டிணத்தில்சிலகாலம்தங்கிமாமன்விருப்பத்தைஎல்லோரி டமும்கூறிமிகுந்தசொத்துடையமாமன்மகளை மதுரைக்கு அழைத்துச் சென்று மணம் செய்துக் கொள்ளப்போவதாக சொல்லி அங்குள்ள சொ த்துக்களை எடுத்துக் கொண்டுப் புறப்பட்டான்.

போகும் வழியில் திருப்புறம்பயம் என்னும் ஊரை அடைந்தனர். அன்று இரவு அவ்வூரில் ஓர்கடம்பவன மரத்தின் கீழ் தங்கினாரகள். ஊழ் வி னையினால் பாம்பு தீட்டப்பட்டுள்ளது மருமகன்இறந்தான். செய்வதறி யாது கத்திக்கதறி புலம்பி மயங்கி வீழ்ந்த வணிகனது மகளைப் பார்த் தஅனைவரும் வருந்தினர்.

அப்போது அங்கு ஓர் மடத்திலிருந்த திருஞானசம்பந்தர் அங்கு வந்தார். கன்னியின் நிலைக்கண்டு வணிகனை விழித்தெழச் செய்தார். சம்பந்தர் கன்னியின் மாசற்ற அன்பினைவணிகனுக்கு எடுத்துக் கூறி, வன்னி மரமும், கிணறும், சிவலிங்கமும் சாட்சியாக வைத்துஅன்றே அங்கேயே திருமணம் செய்துக் கொள்ளும் படி அருளினார்.

வணிகன் சம்பந்தர் கூறிய படி திருமணம் செய்துக் கொண்டு மதுரை வந்தடைந்தான். அவன் இல்வாழ்க்கை இனிதே அமைந்தது. இருமனைவியருக்கும் குழந்தைகள் பிறந்தன.ஒரு நாள் குழந்தைகளின் சச்சரவில் தலையிட்டு எங்கிருந்தோ வந்த ஊதாரியின் பிள்ளைகள் என்று இளையவளின் பிள்ளைகளை ஏசினாள் மூத்தவள். மேலும் அக்னி சாட்சியாக வந்தவள் அவள்இல்லை எனவும் ஆசைக் கிழத்திதானே என கூறி இளையவளை ஏசினாள்.

மனம் கலங்கிய அவள் திருபறம்பயத்தில் சிவலிங்கமும், வன்னி மரமும், கிணறும் தன்திருமணத்திற்கு சாட்சியாகஉள்ளதாகக்அவளுக் குபதிலுரைத்தாள். அந்தசாட்சிகள்இங்குவருமாஎன்றுமூத்தவள்கேட்க, தனக்கு கண்கண்ட தெய்வமான சோமசுந்தரரிடம் தனக்கு ஏற்பட்ட அவசொல்லிருந்துகாத்துஅருளிடவேண்டினாள்மங்கை.

இறைவன் யாவரும் காணுமாறு மூன்று சாட்சிகளையும் வடகிழக்கு தி சையில் தோன்றுமாறுசெய்தார். மூத்தாளை பலரும் இகழ்ந்த போதும் இளையவள் அவர்களைத் தடுத்து அவளைத் தன்தாய் போன்றவள்

எனப் போற்றினாள். பின் வணிகனது இல்வாழ்க்கை முன்போல் இனிதே அமைந்தது.

**பல்லவி**

பெற்றோரை இழந்து தன் அத்தானுடன் மதுரைச் செல்ல
அவனும் வழியிலோர் பாம்பு கடித்திறக்க

**அனுபல்லவி**

வற்றாது கண்ணீர் விடும் கன்னிகைக் கிரங்கி அவனை
உயிர்ப்பித்து மணமுடித்துவைத்தான் சம்பந்தன்

**சரணம்**

சாட்சியின்றி மணந்துக் கொண்ட ஆசை நாயகி யென்று
மூத்தாள் தன்னை ஏச உன்னை உருகி வேண்ட
சாட்சியாய் இருந்திட்ட வன்னியும் கிணறும்
லிங்கமும் வடகிழக்கு திசையில் தோன்றச் செய்தாய்